1973 மார்ச் 20]

Bridge across river Kuzhithurai

* 441 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the scheme of the construction of Kuzhithurai bridge in Kanyakumari district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மார்த்தாண்டம்–பணிச்சமூதூர்–சாலையின் (அரசினர் மாவட்டப் பெரிய சாலை) 0/8-வது மைலில், குழித்துறை ஆற்றின் குறுக்கே ரூ. 20 லட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

குழித்துறை நகராட்சி எல்லைக்குள் சேலம்–கொச்சி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 47) 23/1–மைலில் குழித்துறை ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் ரூபாய் 13 லட்சம் செலவில் அகலப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இப்பணி, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், "தேசிய நெடுஞ்சாலைகள்" திட்டத்தின்கீழ் சேர்க்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது போன்று குழித்துறை–தீக்குரிச்சி பாலம் கட்ட வேண்டுமென்று பொதுமக்கள் பல நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் தீவிரப் படுத்தி கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதலாவது திட்டத்தைப் பொறுத்தவரை ரூ. 20 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலைக் காரணமாக அதைக் கட்டும் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மார்த்தாண்டம்–பணிச்சமூதூர் சாலை 1962-ஆம் ஆண்டில் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, அன்றைய தினம் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக நிறுத்தப்பட்டது. அதன் முக்கியத்துவத்தைக் கருதி, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதை சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: நான் ஏற்கனவே சொல்லியது போல் The Chief Engineer has included the work of construction of a bridge across the Kuzhithurai river at Mile 0/8 Mathandam–Panichamoodur road referred to as item 1 above, in the list of works under Part II Scheme for 1972–73 for approval of the Government. But in view of the

reduced outlay suggested by the Standing Finance Committee, the work was deleted from the final list of works approved. The proposal is under the active consideration of the Government.

திரு. த. சோனேயா : தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுகிற முறை...............(மணியடிக்கப்பட்டது).

Formation of road near Karumanjarai Pond.

*412 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in laying the Panchayat Union road near Karumanjarai Pond, Uthukuli, even though instructions in this regard have already been issued by the District Collector?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருமாஞ்சேரியின் அருகே உள்ள குட்டையின் கரை மேல் சாலே போடுவது சிக்கன மற்றதோடு இடைஞ்சலாகவும் இருப்பதால் குட்டையின் அருகே சாலே போடுவதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

Cases involving Co-operative Societies.

*443 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the police have taken up investigation into the affairs of a number of (1) Co-operative Land, (2) Co-operative Credit Banks during 1971-72; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) 1971-72-ஆம் ஆண்டில் விவசாய வங்கி, கடன் வழங்கு சங்கங்கள் ஆகியவற்றின் வழக்குகளும், கூட்டுறவு நிலவள வங்கிகளில் 6 வழக்குகளும் ஆக 133 வழக்குகள் காவல் துறையினரால் புலனய்வு செய்யப்பட்டன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, சில வழக்குகள் இன்வஸ் டிகேஷன் செய்வதற்கு வெகு காலதாமதம் ஏற்படுவதால் ஒரு கால வரையரை குறிப்பிட்டு இன்வஸ்டிகேஷன் செய்வதற்கான நட வடிக்கை எடுக்க அரசு முன்வருமா?